**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 338/2024**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சுதா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மலையப்பன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சங்கரன்கோவில் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.07.2016 அன்று இரவு 10.10 மணிக்கு நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, 38 வயதுடைய மாரியம்மாள் என்பவரை அவரது அண்ணன் சேகர் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது, 10.07.2016 அன்று மாலை சுமார் 04.35 மணியளவில் அண்ணாமலைப்புதூரில் உள்ள தெற்குதெரு முப்பிடாதியம்மன் கோவில் அருகில் உள்ள அவரது உறவினர் வீட்டில் வைத்து அடையாளம் தெரிந்த ஆண் நபர் அரிவாளால் வெட்டியதில், காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

வலது கையின் கட்டை விரலில் 1 x 0.5 x 0.5 cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 8 ஆகும். அரிவாளால் தாக்கும் போது மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:38:29 +0530